## தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

அரச நிதித் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்கள்த்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச நிதித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) அரச கணக்குகள் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டுநிதி திட்டத்தின் பிரகாரம் ஆண்டிற்காக ரூபா 107.68 மில்லியன் கோரப்பட்டிருந்த போதிலும், 2019 மே 15 ஆந் திகதி கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், அந்த அளவானது ரூபா 79.906 ஆகும். அதற்கமைய அந்த திட்டங்களிடையேயான வேறுபாடுகளுக்கான காரணங்கள் அவதானிக்கப்படாததுடன், ஆண்டிற்காக ரூபா 87.81 மில்லியன் கோரப்பட்டிருந்தது. அதற்கமைய உரிய கட்டுநிதி தொகை உரிய முறையில திட்டமிடப்பட்டிருக்கவில்லை | தேவையான கட்டுநிதி அளவானது நடைமுறைச் சாத்தியமாக திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2018 ஆம் ஆண்டிற்கான 2017.12.22 ஆந் திகதிய திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள வருடாந்த கட்டுநிதி விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளே செயல்நடவடிக்கை திட்டத்திலும், 2019.05.15 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

என்பது அவதானிக்கப்பட்டதுடன், திறைசேரியினால் திணைக்களத்திற்கு கோரப்பட்ட மொத்த கட்டுநிதித் தொகையும் விடுவிக்கப்பட்டிருந்தது.

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயத்திற்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதியேற்பாடுகளை பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் முறையே 7 சதவீதம் மற்றும் 16 சதவீதமாக இருந்தது. | வருடாந்த மதிப்பீடுகளை நடைமுறைச் சாத்தியமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகளில் நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்யும் போது தேவைப்பாட்டிற்கு பொருந்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சில மீண்டெழும் செலவினங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியோற்பாடுகளில் கூடியளவான சதவீதமானது எதிர்பார்க்கப்பட்டவாறு செலவிட நேர்ந்தது. எனினும், மூலதன செலவின விடயங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்டவாறு செலவிட நேராமையால் அந்த செலவின விடயங்களின் நிதியோற்பாடுகள் மீண்டெழும் செலவின விடயத்திற்கு ஒப்பாக சேமிப்பொன்று ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) | இரண்டு செலவின விடயங்களுக்காக 2018 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 500,000 ஆன நிதியேற்பாட்டிற்கு மேலதிகமாக அந்த மதிப்பீட்டினை போன்றே 2,944 சதவீதமான குறைநிரப்பு நிதியேற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் 76 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. மற்றுமொரு செலவின விடயத்திற்காக வருடாந்த மதிப்பீட்டினூடாக | தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு குறைநிரப்பு நிதியேற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியமை. | கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய கொடுப்பனவு சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு தாமதமடைந்தமையின் காரணத்தால் மற்றும் இலத்திரனியல் அரச பெறுகைகள் கட்டமைப்பினை தயாரிக்கும் போது அனைத்து தொகுதிகளும் (Module) தயாரித்து நிறைவு செய்யப்படும் வரையிலும் கொடுப்பனவு மேற்கொள்ள முடியாமையின் அடிப்படையில் |

நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் , குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக ரூபா 4,000,000 ஆன நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 81 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்.

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| ரூபா 342,017 கூட்டுத்தொகையான சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிராத 02 செலவின விடயங்களுக்காக மதிப்பீட்டு நிதியேற்பாடுகளை விஞ்சி ரூபா 341,770 ஆன பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | பொறுப்புகளை உரிய முறையில் கணக்கு வைப்பதற்கு மற்றும் பொறுப்புகளுக்காக கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் போது உரிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உரிய எல்லையினை விஞ்சி பொறுப்புகளை உள்ளடக்க முடியாது என்பதால் ஊஐபுயுளு கட்டமைப்பிற்கு உள்ளடக்குவதற்கு இயலுமையுள்ள பொறுப்புகள் மாத்திரம் பொறுப்புகள் கூற்றில் பதிவு செய்யப்பட்டது. |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

---

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

<u>அவதானிப்பு</u>

| <u>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு</u><br><br>**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**<br>--------------------------------------- | | <u>இணக்கமின்மைகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 340 (1) | அரச நிதித் திணைக்களத்தினால் அரசின் அனைத்து திணைக்களங்களுக்கும் போதியளவான அடியிதழ் பத்திரங்கள் வைத்திருக்கவில்லை என்பதும், சில சந்தர்ப்பங்களில் அச்சீட்டு திணைக்களத்தில் பற்றுச்சீட்டு புத்தகங்கள் விநியோகிக்கப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. | அரசின் அனைத்து திணைக்களங்களினதும் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் போதியளவான அடியிதழ் சேர் புத்தகங்களை பேணிச் செல்வதற்காக ஏற்பாடுகளை விதித்தல். | பொது 172 பற்றுச்சீட்டு புத்தகங்களின் தேவைப்பாடு அரச அச்சக அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஆண்டு முழுதும் காலத்திற்கு காலம் அந்த புத்தகங்கள் பெற்றக்கொள்ளப்பட்டு தொடர்ச்சியாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 316 மற்றும் 317 | நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக அடியிதழ் சேர் புத்தகங்கள் ஒரு பூட்டுடனான சிறு அறையொன்றினுள் திறந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த இடத்திலிருந்தே அரச நிறுவனங்களிலிருந்து வரும் உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்படுவதாகவும் , அடியிதழ்சேர் புததகங்கள் தொடர்பான கடிதங்களின் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வெளிவாரி நபர்கள் அந்த அறையினுள் பிரவேசிக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அடியிதழ் சேர் புத்தகங்களுக்காக பாதுகாப்பினை வழங்குவதற்காக முறையான நடைமுறையொன்றினை ஏற்படுத்தல். | பொது 172 புத்தகங்கள் தொடர்பில் பாதுகாப்பு தொடர்பில் உச்சமாக செயற்பட்டுள்ளதாகவும், இடவசதி போதுமானதாக இல்லாதிருந்தமையால் அதற்காக அறையொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த அறையின் முதலாவது திறப்பு மற்றும் அதன் உப திறப்பு 02 பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | நிதிப்பிரமாணம் 343 | 2018 ஒக்தோபர் 11 ஆந் திகதி அரச அச்சீட்டு திணைக்களத்திடமிருந்து | கடந்த வருடங்கள் முதல் இது வரையிலும், | இதன் போது சில இலக்கங்கள் இல்லாதிருந்தமை அரச |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு புத்தகங்களினுள் 12 பற்றுச்சீட்டுக்கள் உள்ளடங்கியிராதமை அவதானிக்கப்பட்டது. | பற்றுச்சீட்டு புத்தகங்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் தொலைந்து போதல் இடம்பெறுவதுடன், அவ்வாறு மீண்டும் இடம்பெறுவதனை தடுப்பதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் மற்றும் தொலைந்து போதல்கள் தொடர்பில் உரிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | அச்சகத்தின் பணிகளில் ஏற்பட்ட தவறுகள் மற்றும் கவனமின்மை காரணமாக ஏற்பட்டதாகும். எனினும் இந்த வழுக்களுடனான புத்தகங்களை எமக்கு கையளிக்கும் போது அவற்றின் இலக்கங்கள் இல்லாதிருந்ததாக எமக்கு அறிவித்து அந்த புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு அறிவித்து எம்மாலும் ஏனைய திணைக்களங்களுக்கு இவ்வாறு புத்ததகங்கள் பகிர்ந்தததளிக்கப்பட்டுள் ளன. அதன் காரணமாக இஇந்த திணைக்கத்தின் தரப்பினரின் சேதமொன்று அல்லது தவறான நடவடிக்கையொன்று இடம்பெற்றிருக்கவில்லை ல. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| (அ) நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமல்லாத நிதியங்கள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் முடிவுறுத்துமாறு அங்கீகாமளிக்கப்பட்ட 13 நிதியங்கள் தொடடர்பில் 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 02/2018 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 02 நிதியங்களின் மீதிகள் மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், | இந்த 13 நிதியங்களை முடுவதற்குரிய பணிகளை துரிதமாக முன்னெடுத்தல் மற்றும் அந்த நிதியங்களுக்குரிய நியதிச்சட்டங்களை தற்கால தேவைப்பாடுகளுக்க பொருந்தும் வகையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதியங்களின் மீளாய்வுக் குழுவின் அறிக்கையில குறிப்பிடப்பட்டுள்ள 13 நிதியங்களை முடுவதற்குரிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2018 வெளியிடப்பட்டுள்ளதுடன், அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் வரிசை அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை இந்த |

| | | | |
|---|---|---|---|
| | 04 நிதியங்கள் தொடர்பில் கூட்டங்களை நடாத்துதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | | திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | 2015 மே 19 ஆந் திகதியின் பின்னரான காலப்பகுதிக்குரிய 06 திறைசேரிக் குறிப்புகளை உரிய முறையில் வெளியிடுவதற்கு நடடவடிக்கை மேற்கொள்ளப்படடாமையால், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்குரிய திறைசேரிக் குறிப்புகள் எதிர்வரும் பண நடவடிக்கைகளின் போது வழிகாட்டிகளாக கருதுவதற்கு இயலாது போயுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | திறைசேரி குறிப்புகளை உரிய முறையில் வெளியிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | வெளியீட்டுக் கோவை இலக்கம் 240 மற்றும் 356 இல் வெளியிடப்பட்ட அவதானிப்புகளுடன் சமனானவை என்பதால் வெளியீட்டுக் கோவை இலக்கம் 376 இன் அவததானிப்புகள் தொடர்பில் தனியான திறைசேரி குறிப்புகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 04 வெளியீட்டுக் கோவைகள் தொடர்பில் திறைசேரி குறிப்புகளை வரைபாக்கி அச்சிடல்களுக்காக அரச அச்சீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

### 3.2 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அரச நிறுவனங்கள் தொடடர்பில் ரூபா 422.99 மில்லியன் கூட்டுத்தொகையான பதிவழித்தல்கள் மற்றும் விட்டுவிடுதல்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த திட்டவட்டமான திகதியொன்றில் பதிவழித்தல் மற்றும் விட்டுவிடுதல்களுக்காக அங்கீகாரத்தினை வழங்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள மத்தியப்படுத்தப்பட்ட பதிவேடொன்று அல்லது தரவுக் கட்டமைப்பொன்று இல்லாதிருந்தமை | மத்தியப்படுத்தப்பட்ட பதிவேடொன்று அல்லது தரவுக் கட்டமைப்பொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பதிவுகளுக்காக மத்தியப்படுத்தப்பட்ட பதிவேடொன்று / தரவுக் கட்டமைப்பொன்று பேணுவதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது நட்டங்கள் மற்றும் பதிவளித்தல்களின் பெறுமதியான ரூபா 375.57 மில்லியனில் அதிகரித்திருந்ததுடன், அது 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 792 சதவீத அதிகரிப்பொன்றாகும். | நட்டங்கள் மற்றும் பதிவளிப்பு மீதிகளை துரிதமாக தீர்க்கப்பட வேண்டியமை. | இணங்குகின்றேன். |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அதன் கீழான குறிகாட்டிகளை அடிப்படையாக கொண்டு உரிய நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் அடைதல் தொடர்பில் திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உரிய நடடவடிக்கைகள் மெற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான நோக்கங்களை அடைவதற்கு துரதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த திணைக்களத்தினால் பாரிய அளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படத துடன், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினூடாக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்திப் பணிகளுக்கு உரியதாக முன்வைக்கப்பட்டிருந்த அமைச்சரவை பத்திரங்களுக்கு கௌரவ நிதி அமைச்சரின் அவதானிப்புகளை தயாரிப்பதனூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பங்களிப்பு செய்யப்படும். |